1974 மார்ச் 9]

(ஆ) பேரவைத்தலைவர் மாடத்திற்கு அனுமதிச் சீட்டு வழங்காதது குறித்து.

திரு. முனு ஆதி : இன்று முக்கியமான நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது. இங்கு நடப்பது என்ன என்பதை நேரில் தெரிந்து கொள்ள பல பொதுமக்கள் வந்திருக்கிறார்கள். ஸ்பீக்கர் காலரிக்கு அமைச்சர்களுக்கு வேண்டியவர்கள் மட்டும் உட்கார பாஸ் கொடுத்துவிட்டு உறுப்பினர்களுக்கு இல்லை என்று மறுப்பது நியாயமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

*** திரு. கோவை செழியன் :** திரு. முனு ஆதி குறிப்பிட்டதைப் போலவே இன்று உறுப்பினர்கள் யாரை அனுமதிக்க வேண்டுமென்று பாஸ் கேட்டாலும் இல்லை என்று மறுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் சாதாரணமாக அதிகக் கூட்டம் இருக்கிறபோது ஒரு மணிக்கு ஒரு முறை காலரியில் உள்ளவர்களை மாற்றுவார்கள். ஆனால் இன்றைக்கு மந்திரிகள் அனுப்பியவர்களை முழுநாளும் உட்கார அனுமதித்து மற்ற உறுப்பினர்களுக்கு பாஸ் இல்லை என்பது உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதிக்கக்கூடிய முக்கியமான விஷயம். அதுவும் இன்றைக்கு உதவி சபாநாயகர் மீது கொண்டு வரப்பட்டிருக்கிற தீர்மானம் விவாதத்திற்கு வருகிறது. வந்தால் என்ன? இதற்கு ஏன் இவ்வளவு பயம் என்று கேட்கிறேன், உறுப்பினர்கள் யாரையும் இங்கே காலரியில் அனுமதிக்க முடியாமல் தடுக்க காலரி பாஸ்களை எல்லாம் அமைச்சர்களுக்கே கொடுக்க வேண்டுமா? சபாநாயகர் அவர்கள் இதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பல பேர்களுக்கு இன்று பாஸ் மறுக்கப்பட்டிருக்கிறது. இதற்குச் சரியான பதில் சொல்ல வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த விஷயத்தை யொட்டியே நானும் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் சபாநாயகர் காலரி முழுமைக்கும் அமைச்சர்களே பாஸ் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் நான் காலையிலேயே வரக்கூடிய உறுப்பினர். ரொம்ப முக்கியமான ஒருவர் வத்தல்குண்டுவில் இருந்து வந்திருக்கிறார். அவருக்காக நான் பாஸ் எழுதிக்கொடுத்தேன். எனக்கு மறுக்கப்பட்டுவிட்டது. அவருக்குக் கூட பாஸ்

கிடைக்கவில்லை. இதற்கு என்ன காரணமோ தெரியவில்லை. இன்றைக்கு இங்கு நடக்கக்கூடிய விவாதத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தே பலர் வந்திருக்கிறார்கள். அப்படி இருக்கிற போது வேறு எந்தக் கட்சி உறுப்பினர்களுக்கும் பாஸ் கொடுக்காது, அமைச்சர் ஆட்களுக்கே, கவர்னர் ஆட்களுக்கே பாஸ் கொடுக்கப் பட்டு விட்டது என்று சொல்வது அங்கத்தினர்களுடைய உரிமையைப் பறித்ததாக ஆகும் என்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : இதைவிட முக்கியமான கூட்டங்கள் இங்கே நடந்திருக்கின்றன. விசிட்டராக வந்தவர்கள் கால் செருப்பு களை எல்லாம் எடுத்து அடித்த நிலை இங்கே ஏற்பட்டிருக் கிறது .. அப்போதெல்லாம் எவ்விதத் தடையும் பண்ணவில்லை. (ஒரே சமயத்தில் பல உறுப்பினர்கள் எழுந்து ஆட்சேபித்தார்கள் கூச்சல்—குழப்பம்.)

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த அவையில் எப்போதும், யாரும் யாரையும் செருப்பால் அடிக்கவில்லை. சட்ட மன்றத்தில் அப்படி ஒரு நிகழ்ச்சி இடம் பெறவில்லை. அப்படி இருக்கிறபோது இங்கே அப்படி நடந்ததாகச் சொல்வது இந்த மன்றத்தையே குறைவுபடுத்துவதாக ஆகும் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே நடைபெறாத ஒரு நிகழ்ச்சியை திரு. சுரேந்திரன் இங்கே நடந்ததாகச் சொல்வது சரியல்ல.

திரு. எம். சுரேந்திரன் : நடக்கவில்லை என்றால் என்னைத் திருத் துங்கள். எதற்காக எல்லோரும் எழுந்து பேசவேண்டும்? நீங்கள் திருத்துங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி இங்கே நடைபெற வில்லை என்றுதான் நான் சொல்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : தவறைச் சுட்டிக் காட்டுவது உங்கள் கடமை. நான் இங்கே என்று சொன்னதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். இந்த மன்றத்திற்கு வெளியிலே, இந்தக் கட்டி டத்தை ஒட்டியே அந்த மாதிரி கால்மிதியை எடுத்து வீசிய சம்பவம் நடந்திருக்கிறது. பத்திரிகையில் வந்திருக்கிறது.

அப்போதெல்லாம் கூட பார்வையாளர் காலரிக்கு உறுப்பினர்கள் யாரையும் அனுப்பத் தடை விதிக்கப்பட்டது இல்லை. ஆனால் இப்போது பார்வையாளர் காலரிக்கு உறுப்பினர்கள் யாரையாவது அனுப்ப வேண்டுமென்றால் அவரது தொழில் என்ன, உறவு என்ன, அவருக்குக் கல்யாணம் ஆகியிருக்கிறதா, இல்லையா என்பன போன்ற விவரங்களை எல்லாம் உறுப்பினர்கள் கொடுக்க வேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இதற்கு விசேஷ காரணம் என்ன என்றும் சொல்லப்படவில்லை. இவை மெம்பர்களின் உரிமையைப் பறிப்பதாக ஆகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். திரு. தங்கமணி அவர்கள் சொன்னதைப்போல காலை எட்டேமுக்கால் மணிக்கு வந்து கேட்கிறபோதே, அமைச்சர்களுக்கு எல்லாப் பாஸ்களையும் கொடுத்தாகி விட்டது, உங்களுக்கு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இது மெம்பர்களுடைய உரிமையைப் பறித்ததாகும். சரியான முறையில் செயல்படவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சபாநாயகர் உறுப்பினர்களுடைய உரிமையைக் குறைக்கக் கூடாது என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : மேலே காலரியில் இன்னும் இடம் இருக்கிறது. கேட்டால் இடம் இல்லை என்கிறார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அது கவர்னர் காலரி.

திரு. ஜே. ஜேம்ஸ் : மெம்பர்கள் கூறியதைப்போல இந்த நிகழ்ச்சியில் நானும் பாதிக்கப்பட்டவன். கன்னியாகுமரியில் இருந்து 2 பேர்கள் வந்திருக்கிறார்கள். பாஸ் வாங்கச் சென்றிருந்தபோது, எல்லாப் பாஸ்களையும் அமைச்சர்களுக்குக் கொடுத்துவிட்டதாகவும், பாஸ் இல்லை என்றும் சொல்லிவிட்டார்கள். இது வரவேற்கத் தக்கது அல்ல. அமைச்சர்களைச் சேர்ந்தவர்கள் நிகழ்ச்சியைப் பார்க்க விரும்புவதுபோல, எங்களைச் சேர்ந்தவர்களும் பார்க்க விரும்புகிறார்கள். சரித்திரப் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சி நடக்கப் போகிறது. ஆகவே எங்களைச் சேர்ந்தவர்களும் பார்க்கத் தாங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சாதாரணமாக லோக்சபாவில் மந்திரிகள் இப்படி காலரி டிக்கெட் வாங்குவதே கிடையாது. அமைச்சர்களுக்குக் கொடுத்துவிட்டேன், உறுப்பினர்கள் யாருக்கும் கிடையாது என்று சொல்வதும் எங்கும் கிடையாது. அதுபோன்ற முறையை அமைச்சர்கள் இங்கே பின்பற்றினாலும் நல்லது. அல்லது ஒவ்வொரு கட்சிக்கும் இவ்வளவு என்ற வகையில் சபாநாயகர் எல்லோருக்கும் நியாயமாக இடம் ஒதுக்கினாலும் நல்லது, வரவேற்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது சபாநாயகர் காலரியில் 35 உறுப்பினர்களுக்குத்தான் இடம் கொடுக்க முடியும். முன்னாலே வருகிறவர்களுக்கு முன்னாலே கொடுத்து விடுகிறார்கள். பொதுவாக சபாநாயகர் காலரியைப் பொறுத்தவரையில் 1 மணி நேரம்தான் என்று சொல்வது கிடையாது.

திரு. ஜே. ஜேம்ஸ்: என் கிடையாது? ஒரு மணி நேரம் தான் கூட்டம் அதிகமாக இருக்கிறபோதெல்லாம் அனுமதித்து வந்திருக்கிறார்கள்.

THIRU K. T. K. TANGAMANI: Whenever we apply for Speaker's Gallery passes, the passes are issued. I am surprised that it is done without the knowledge of the Hon. Speaker.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விசிடர் காலரிக்கு பாஸ் கொடுக்கிற அதிகாரத்தை கீழே இருக்கிற செக்ரடரிகளிடமே நான் கொடுத்துவிட்டேன். ஒவ்வொன்றையும் நான் கவனித்துக் கொண்டிருப்பது என்பது இயலாத காரியம். இப்போது இது விஷயம் என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை எதிர்காலத்தில் வாராமல் இருக்கும்படி பார்த்துக் கொள்கிறேன். இன்றைக்கு உறுப்பினர்கள் யாரையாவது அனுமதிக்க வேண்டுமென்றால் பார்வையாளர் காலரிக்குப் பாஸ் கொடுக்க எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

(முற்பகல் 10-30)

திரு. எம். சுரேந்திரன்: இன்று காலையில் விசிட்டர்ஸ் காலரியில் 10-00-விருந்து 10-30 வரைதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து 11-00 மணி வரை என்று நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1974 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுரேந்திரன் அவர்கள் 4 பேருக்கு இடம் வாங்கிக் கொடுத்துள்ளார். நான் கேட்டதற்கு ஓர் ஆளுக்குக்கூட கிடைக்கவில்லையென்று சொன்னார். அதுவும் முறையல்ல.

திரு. எம். சுரேந்திரன் : ஸ்பீக்கர் காலரியிலே இடம் இல்லையென்றுதான் சொல்கிறேன். இப்பொழுது பெற்றுள்ளவர்களை 11-00 மணி வரையிலும் தொடர அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : May I ask one question, Sir? I want one clarification and ruling from the Chair. Under Rule 238 of the Tamil Nadu Assembly Rules, the admission to the Assembly Chamber of strangers and officials during the sittings of the Assembly shall be regulated in accordance with the regulations made by the Speaker. I would like to know whether any regulations have been made by the Hon. Speaker, and if so, will they be circulated to the Members so that they may have the benefit of these regulations and comply with the rules. So far as admission of members is concerned, there should be some priority. Yesterday's applications have been filed. When we went there, we were told that the passes have already been issued. So, some procedure may be followed and that procedure may be communicated to the hon. Members. Therefore, there may not be any further discussion on the matter.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே ரெகுலேஷன்ஸ் இருக்கின்றன. அவை உறுப்பினர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

DR. H. V. HANDE : On a point of order. I would like to know whether before the commencement of the No-Confidence Motion against the Deputy Speaker sought to be moved by the hon. Member, Thiru S. Kandappan, whether the Hon. Speaker would give us some distinct guide-lines and also the procedure to be adopted during the discussion of the No-Confidence Motion against the Deputy Speaker, so that the procedure adopted on the 2nd December 1972 may not be repeated here. At that time Thiru K. A. Mathialagan was not given an opportunity to have his say on the matter. In order to avoid that, I want your distinct guide-lines.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. ஏதாவது முறைகேடு நடந்தால், அப்பொழுது நீங்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பிக் குறிப்பிடலாம்.

DR. H. V. HANDE : I would like to know whether any distinct guide-lines have been drawn up. I am worried that what has happened on the 2nd December 1972 should not be repeated again.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடைமுறையிலே இருப்பதற்கு மாறாக எதுவும் நடக்காது. மாறாக நடந்தால் சுட்டிக் காட்டலாம். There is no point of order.

(இ) ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப் பட்டது குறித்து.

திரு. க. உரொ. எட்மண்ட் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். எனக்கு சட்டமன்றத் துறையிலேயிருந்து இப்பொழுது ஒரு கடிதம் வந்திருக்கிறது. ஏறத்தாழ 4 நாட்களுக்கு முன்னால், சட்டமன்றத்தினுடைய விதிமுறைகள் 42-வதின் கீழ் நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை நம்முடைய அவையில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றி ஒரு தீர்ப்பு கொடுத்திருந்தால், அதைப்பற்றி இந்த அவையிலே விவாதிப்பதற்கு வழி இல்லை யென்று விதி இருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : அதன்மேலிருக்கிற தீர்ப்பைப் பற்றித்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றிக்கூட இங்கே பேசக்கூடாது. நமக்கு விதி முறைகள் இருக்கின்றன. சட்டசபைத் துறையிலிருந்து வந்தாலும், செயலாளரிடமிருந்து வந்தாலும், அது சபாநாயகருடைய தீர்ப்புதான். திரு. எட்மண்ட், உங்களுக்கு நன்றாகத் தெரியும்—செயலாளர் கையெழுத்துப் போட்டிருந்தாலும், சபாநாயகருடைய உத்தரவு பேரிலேதான் அது வருகிறதே தவிர, அவர்களாகக் கொடுப்பதல்ல. சபாநாயகருடைய தீர்ப்பைப்பற்றி இங்கே பேசவே கூடாது.

1974 மார்ச் 9]

திரு. க. உரொ. எட்மண்ட் : நான் ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் என்ன கொடுத்திருக்கிறேன் என்பதைப் பற்றியும் பேசப் போவதில்லை, அதன் மேல் நீங்கள் கொடுத்திருக்கிற தீர்ப்பைப் பற்றியும் பேசப் போவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேனே, அது என்ன ஆயிற்று என்று கூடக் கேட்கக் கூடாது.

THIRU G. R. EDMUND : Under Rule 42 of the Tamil Nadu Assembly Rules, a motion for an adjournment of the business of the Assembly for the purpose of discussing a definite matter of urgent public importance may be made in accordance with the rules in this chapter.

ஒத்திவைப்புத் தீர்மானம் இந்த விதிமுறைகளிலே எப்படிக் கொடுக்கப்படலாம் என்று ரூல் 42-லே கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்து,

"The Speaker may withhold consent to the matter being raised before the House and in that case it shall be communicated to the member together with the reasons therefor and the member shall not raise the matter as such in the House ".This is under Rule 44.

என்ற விதிமுறைகள் இருக்கின்றன. ஆக, ஒத்தி வைப்புத் தீர்மானத்தை நீங்கள் எப்பொழுது நிராகரிக்கலாம்? ரூல் 42-க்கு மீறிய வழிகளிலே கொடுக்கப்பட்டிருந்தால் நீங்கள் அதை நிராகரிக்கலாம். ஆனால், எனக்குக் கொடுத்திருக்கிற கடிதத்தில் இந்தப் பொருளைப் பற்றி பட்ஜெட் ஜெனரல் டிஸ்கஷனில் பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது, என்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் காரணம்.

There is no point of order.

திரு. க. உரொ. எட்மண்ட் : நான், ஜெனரல் டிஸ்கஷனில் இதைப்பற்றித்தான் பேசவேண்டும், இப்படித்தான் பேசவேண்டுமென்று சொல்ல ஸ்பீக்கருக்கு அதிகாரம் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அனுமதிக்கவோ, ஒத்துக்கொள்ளவோ, மறுக்கவோ, பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த உரிமையை ஒட்டித் தான் இது கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதைப்பற்றி நீங்கள் கேட்கக் கூடாது.

(3) பேரவைத் துணைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

திரு. செ. கந்தப்பன் : தலைவர் அவர்களே,

"திரு. பெ. சீனிவாசன் அவர்களைப் பேரவைத் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க இப்பேரவை தீர்மானிக்கிறது" என்கிற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. மு. சுருளிவேல் : மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்கள் முன்மொழிந்த, திரு. பெ. சீனிவாசன் அவர்களைப் பேரவைத் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க இப்பேரவை தீர்மானிக்கிறது என்ற தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விவாதம் 2 மணி நேரத்திற்கு மேல் போகக் கூடாது. இப்பொழுது மணி 10.30 ஆகிறது. 12.30 மணியோடு அது முடிவடைய வேண்டுமென்று கூறிக்கொள் கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இன்றைக்கு 1.30 மணி வரையில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைக்கே 2 மணி நேரம் தான் விவாதம் என்று சொல்லியிருக்கிறோம். இப்பொழுது ஏறத்தாழ 10.30-க்கு ஆரம்பிக்கிறோம், 12.30-க்கு முடிக்கலாம்.

THIRU K. T. K. TANGAMANI : What has transpired in the Business Advisory Committee should be taken into consideration. You were pleased to say that the discussion will be held from 10.30 to 12.30 p.m. on the 12th March 1974. Now the date has been changed. Why not the time also be extended? இது மாற முடியாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்படி முடியும்?